செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 335 நாள் : 9/6/17

# பத்திரிக்கை செய்தி

கத்தார் நாட்டுடன் சவூதி அரேபியா உள்ளிட்ட ஐந்து அரபு நாடுகள் ராஜ்ஜிய உறவுகளை முறித்துக்கொண்டுள்ளதை தொடர்ந்து அந்நாட்டில் பதட்டமான சூழ்நிலை நிலவிவருகிறது. மேலும் விமான சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து கத்தார் நாட்டின் தலைமைபகமான தோஹாவில் அமைந்துள்ள இந்திய தூதரகம் அந்நாட்டில் நிகழும் அனைத்து நடவடிக்கைகளையும் உன்னிப்பாக கவனித்து வருவதுடன் கத்தார் அரசிடம் தொடர்பு கொண்டு கத்தார் நாட்டில் வாழும் இந்திய பிரஜைகளின் பாதுகாப்பிற்கு உறுதி அளித்துள்ளது என்றும், அங்கு அவர்கள் சுமுகமான வாழ்க்கையை தொடர அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாகவும், மேலும் இந்திய பிரஜைகளின் நிலை குறித்து அறிய கீழ்கண்ட மின் அஞ்சல், டிவிட்டர் முகவரி மற்றும் உதவி மையங்கள் இந்திய தூதரகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் தமிழக அரசின் பொதுத் துறை கூடுதல் அரசு செயலாளரிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிவிட்டர் முகவரி : Twitter Handle[@IndEmbDoha]

மின் அஞ்சல் : labour.doha@mea.gov.in

உதவி மைய விபரங்கள்

தொலைபேசி எண் (அலுவலக நேரங்களில்) :44255777

தொலைபேசி எண் (அலுவலகம் இயங்காத நேரங்களில்) :55575086

இந்திய கலாச்சார மையம் (Indian Cultural Centre ICC): 50536234

இந்தியன் கமியூனிட்டி பெனவோலன்ட் பாரம்
(Indian Community Benevolent Forum (ICBF) : 55512810, 55532367, 55342708

எனவே கத்தார் நாட்டில் வாழும் வேலூர் மாவட்டத்தை சேர்ந்த இந்திய பிரஜைகளின் நிலை குறித்து மேற்காணும் மையங்களில் தொடர்பு கொண்டு விபரங்களை அறியலாம் என வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., தெரிவிக்கிறார்.

ஓம்/-சி.அ.ராமன்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர் மாவட்டம்.

செ.ம.தொ.அ. 9/6/17
வேலூர்- 9.

/உத்தரவுபடி/

அலுவலக மேலாளர் (நீதியியல்)
9/6/17